**தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 21 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 15,267.51 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 6,902.00 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 8,365.51 மில்லியன் அதாவது 54.79 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 8,554.03 | 2,350.22 | 6,203.81 | 72.52 |
| மூலதனம் | 6,713.48 | 4,551.78 | 2,161.70 | 32.20 |
| மொத்தம் | 15,267.51 | 6,902.00 | 8,365.57 | 54.79 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக 20.03.04.00 என்ற வருமானக் குறியீட்டிற்காக ரூபா 800.00 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 772.05 மில்லியன் வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 96.51 சதவீத அளவாக இருந்தது.

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 24001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 5.50 | 5.28 | 3.80 | 4.30 | 27.00 | 19.87 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0262/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 87,677 ஆக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ்வரும் 6000/0000/00/0013/0129/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 20.18 மில்லியன் ஆகும்.

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,500.00 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளில் எதுவும் பயன்படுத்தப்படாமையினால் அம்மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 05 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.2 வருமானக் கணக்கு

திணைக்களத்தால் 20.03.04.00 என்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற மோட்டார் சைக்கிள் தொடர்பான ஆரம்பக் கொடுப்பனவு தொடர்பான வருமானக் கணக்கு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 செப்தெம்பர் 23 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 யூன் 30 இல் உள்ளவாறு மோட்டார் சைக்கிள் பெற்ற உத்தியோகத்தர்களின் எஞ்சிய சேவைக் காலம் 01 வருடத்திற்குக் குறைவாயின் மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டருக்காக முறையே ரூபா 100,000 மற்றும் ரூபா 90,000 வீதம் செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு பணம் செலுத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் 02 மாவட்டங்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம், உரிய நிறுவனத்தினாலும் மோட்டார் சைக்கிள் பகிர்ந்தளித்தல் தொடர்பாகவும் மேற்கூறப்பட்ட விபரங்களை உள்ளடக்கியும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 07 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MC – II ஆம் இலக்க பொது அறிவுறுத்தல் கடிதத்தின் பிரகாரம் வெளிக்கள உத்தியோகத்தரொருவர் மோட்டார் சைக்கிள் உரித்தற்ற பதவியொன்றிற்கு மாறுதல், சேவையிலிருந்து அகற்றுதல், சேவையைக் கைவிடல், குறித்த காலத்திற்கு முன்னர் ஓய்வு பெற்றுச் செல்லல் போன்ற சந்தர்ப்பங்களின் போது மோட்டார் சைக்கிளுக்குரிய சந்தைப் பெறுமதி ஒரே தடவையில் செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் உரிய மோட்டார் சைக்கிளின் தகவல்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய சகல தகவல்களும் பெறப்பட்டிருந்ததா என்பது தொடர்பான உறுதிப்படுத்தலொன்றை உரிய நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வெளிக்களக் கடமைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள், வெளிக்கள ரீதியற்ற கடமைகளுள்ள இடங்களுக்கு இடம்மாறுதல், குறித்த காலத்திற்கு முன்னர் ஓய்வு பெறல், சேவையிலிருந்து விலக்குதல் மற்றும் சேவையைக் கைவிடல் போன்ற காரணங்களினால் அந்த மோட்டார் சைக்கிள்களின் பெறுமதியாக ரூபா 20,175,120 தொகை திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தால் அதற்குரிய தகவல்கள் நிதிக் குத்தகை உடன்படிக்கைகளிலிருந்தும் கையளித்தல்களிலிருந்தும் அகற்றுவதற்காக உரிய நிதி நிறுவனங்களுக்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கும் அறிவிக்க வேண்டியிருந்தது. இருந்த போதிலும், திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டின் போது அவ்வாறு கிடைத்த ரூபா 20,175,120 தொகை புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வைப்புக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல்களில் 2015 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களில் மக்கள் பிரதிநிதிகளால் இரண்டு மோட்டார் சைக்கிள் வீதம் பெறப்பட்டு, பின்னர் மேலதிகமாகப் பெறப்பட்ட மோட்டார் சைக்கிளுக்குரிய மீளச் செலுத்தப்பட்ட பணத்தையும் உள்ளடக்கியிருந்ததாக திணைக்களத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தால் அப்பெறுமதி 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய வருமானத் தலைப்புக்களுக்குரிய ரூபா 4,265,694 தொகையான வருமானம், இவ்வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதுடன் அச் செலவு வைத்தல் இனங்காணப்பட்டிருந்த போதும், திணைக்களத்தால் 2016 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் அவை சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஏனைய 02 திணைக்களங்களிலிருந்து இவ்வருமானக் கணக்கிற்கு ரூபா 157,020 தொகை தவறுதலாக செலவு வைக்கப்பட்டிருந்த போதும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அவற்றைச் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உத்தியோகத்தர்களை அகற்றும் போது மீளச் செலுத்தப்பட்ட பணம் பொது வைப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அவ்வாறு பெறப்பட்டிருந்த ரூபா 4,758,260 தொகை இவ்வருமானக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) மோட்டார் சைக்கிள்களுக்காக ஆரம்பக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும், உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 200 இற்கு அண்ணளவான அளவில் அந்த மோட்டார் சைக்கிள்கள் பகிர்ந்தளிக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கொள்வனவு செய்யப்பட்ட 500 ஸ்கூட்டர்களும் பகிர்ந்தளிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

24001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மரணமடைந்த / ஓய்வுபெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்கள்களிடமிருந்து 14 வருட மற்றும் 15 வருட காலம் முதல் அறவிடவேண்டிய ரூபா 305,622 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களத்தால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அக்கடன் பணம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 307,599 கூட்டுத்தொகையான கடன் மீதியை மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதில் ஒரு கடன் மீதி 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 3.4 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணப்பட்ட ரூபா 87,677 தொகையான மீதியில் 2008 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 83,325 தொகையான வெளிநாட்டுப் பிரயாண முற்பணமும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அம் முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்பாக கூட்டுமொத்தமாக ரூபா 5,352,812 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 8,791,389 ஆனமையால் ரூபா 3,438,577 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 94(1) மற்றும் 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 6.4 ஆம் பந்தியின் பிரகாரம் பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன் அதற்காக உரிய செலவின விடயத்தில் போதியளவான நிதி ஏற்பாடு காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான உறுதிப்படுத்தலின்றி ரூபா 8,217,231 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.6 இணங்காமைகள்**

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட சங்கங்களுடன் ஒரு வருட காலத்திற்காக பொதுத் திறைசேரிக்கான வாகனங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டியிருந்தது. எனினும் திணைக்களத்தால் வருடாந்தம் அவ்வாறான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் ஒப்பந்தமொன்றிற்குப் பதிலாக வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது அதற்குரிய வங்கியுடன் தனித்தனியான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பந்திகளின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களில் நிறுவனத் தலைவர் தமது வரிசை அமைச்சின் செயலாளரின் சிபாரிசுடன் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பியதன் பின்னர் அந்த விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு முன்னுரியை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும் அந்த அரச நிறுவனம் அங்கீகாரம் வழங்கிய குத்தகைக் கம்பனியிலிருந்து உரிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாது திணைக்களத்தால் விண்ணப்ப படிவத்தின் பிரகாரம் உரிய கம்பனியுடன் அவ்வப்போது உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் நாயகத்திற்காக இதன் கீழ் பெறக்கூடிய உற்பத்தி மற்றும் சுங்க வரியற்ற வாகனமொன்றின் ஆகக்கூடிய சந்தை விலை ரூபா 4 மில்லியனாக இருந்த போதிலும், அதற்கு முரணாக அந்த விலையினை விட கூடுதலான விலையில் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**3.7 செயலாற்றல்**

--------------------------

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்குத்தகை முறைமையின் கீழ் அரச நிறுவனங்களுக்காக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கும், வாகனங்களைக் கொள்வனவு செய்ததன் பின்னர், பராமரிப்புச் செலவினம் அதிகமாகவுள்ள பழைய வாகனங்களை அகற்றுவதற்கும் இந்த சுற்றறிக்கையின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிதிக் குத்தகை முறைமை ஆரம்பம் முதல் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை 3958 வாகனங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கிரயம் ரூபா 12,745.51 மில்லியனாக இருந்த போதிலும், அதில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,230.82 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 100 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்தது. 2010 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய BD/GPS/130/9/12 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் 02 அரச

வங்கிகளிலிருந்தும் அதனோடு இணைந்த குத்தகைக் கம்பனியிலிருந்தும் மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 150 இன் 2 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தால் அரசாங்க வங்கியுடன் இணைந்த குத்தகைக் கம்பனியொன்றுடனும் மேலும் ஒரு அரசாங்க வங்கியுடனும் கலந்துரையாடி அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.3 ஆம் வழிகாட்டியின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான கூறுவிலை மற்றும் நிபந்தனைகள் சமர்ப்பித்த குத்தகைக் கம்பனி தெரிவு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்தக் கொள்வனவுகள் அவசரமாகச் செய்ய வேண்டியிருந்தமையால் அந்த ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு அல்லது பெறுகை நடைமுறைகளிலிருந்து விலகியதற்காக எந்த அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) சற்றறிக்கையின் புறம்பாக செயற்படுவதற்குரிய அங்கீகாரம் தொடர்பாக விசாரணை செய்த போது அரச நிறுவனங்கள் யாவற்றுக்காகவும் ஒரே தடவையில் கணிசமான வாகனங்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் கிடைக்கின்ற கழிவு நலனைப் பெற்றுக்கொள்வதற்காகவும் சகல வாகனத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் 50 வாகனங்களுக்கு மேல் கொள்வனவு செய்யும் போது கழிவு நலன் வழங்கப்படுவதாகவும் திணைக்களத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தெரிவின் அடிப்படையில் பரீட்சித்த போது வாகனங்கள் 01, 03, 04 ஆக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்குரிய திணைக்களத்தினால் 02 கட்டளைகளாக கணிசமான வாகன எண்ணிக்கையொன்று பெறப்பட்டமையால் குறைக்கப்பட்ட விலையில் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) பணம் அறவிடப்படாமல் (Free Unit) 49 வாகனங்கள் கிடைத்திருந்ததுடன் அந்த வாகனங்கள் 22 அரச நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(v) இரண்டு தனியார் கம்பனிகள் மூலம் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இணங்கியிருந்ததுடன் அக்கம்பனிகளிலிருந்து கிடைக்கவேண்டிய மொத்தக் கழிவு ரூபா 71,250,000 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அக்கம்பனியிலிருந்தும் கழிக்கப்பட்ட விலையின் கீழ் வாகனங்கள் பெறப்பட்டதாக திணைக்களத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(vi) நிதிக்குத்தகை முறைமையின் ஆரம்பம் முதல் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை 3958 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது 172 நிறுவனங்களுக்குரிய 2668 வாகனங்கள் அகற்றப்பட வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்தது. அந்த வாகனங்களிலிருந்து 16 சதவீதம் அதாவது 432 வாகனங்களுக்குரிய அகற்றுதல்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிதிக்குத்தகை முறையை அமுல்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட 10 வருடங்களை விட பழைய மற்றும் பொருளாதார ரீதியில் பயனற்ற வாகனங்களை அகற்றும் இலக்கை

அடைதல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) நிதிக்குத்தகை முறைமையின் கீழ் 05 வருட காலத்தில் குத்தகைத் தவணைகளைச் செலுத்தியதன் பின்னர் வாகனத்தின் உரித்து முழுமையாக குத்தகை செலுத்திய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டமையும், நிதிக்குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதி கொடுப்பனவுக் காலம் முழுவதும் ஏற்படுகின்றமையால் அதன் நிதி ரீதியான அச்சுறுத்தல் அக்காலம் முழுவதும் பரவிக் காணப்படுகின்றமையாலும் அதன் கீழ் வாகனங்களின் பராமரிப்புச் செலவினம் குத்தகை செலுத்துபவருக்கு கையளிக்கப்பட்ட போதும் புதிய வாகனங்களின் பராமரிப்புச் செலவுகள் முதல் 05 வருடங்களிலும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் காண்பித்து 2010 திசெம்பர் மாதத்தில் நிதிக் குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த முறைமையில் காணப்படுகின்ற பலவீனங்களை மாற்றியமைப்பதற்கும் அரசாங்க நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற பாரியளவிலான பராமரிப்புச் செலவினங்களைக் குறைத்தல் குத்தகைத் தொழிலை மேம்படுத்துதல் போன்ற எதிர்பார்ப்புடன் 2016 பெப்ரவரி மாதத்தின் போது செயற்படு குத்தகை முறைமை சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்படு குத்தகையின் முறைமையின் போது வாகனமொன்றிற்காக 60 மாத நிலையான வாடகை அடிப்படையின் கீழ் ‘‘பயன்படுத்தியபின் மீண்டும் கையளித்தல் அடிப்படையில்’’ வாகனங்கள் பெறப்பட்டமையால் வாகனங்களின் உரித்து ஒருபோதும் அரசிற்குச் சொந்தமாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(viii) இந்த குத்தகைக்காக 2010 திசெம்பர் 14 ஆந் திகதி திறைசேரி செயலாளர், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க வங்கியொன்றின் பிரதிநிதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதற்காக 12 சதவீத வட்டி வீதம் அறவிடுவதற்கு இணங்கியிருந்த போதிலும் அரச வங்கியிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது 10.5 சதவீதம் முதல் 14.5 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதவிடத்து அல்லது காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டிற்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக போதியளவாக இல்லாதவிடத்து குறைநிரப்பு உதவிச் சேவை மற்றும் அவசரத் தேவை பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ் தேவையான நிதி ஏற்பாடு திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டின் போது 51 கோரிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 28 கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டு அளவினை விட கூடுதலான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதில் 08 கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து 35 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) இதற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டின் பிரகாரம், இதன் கீழ் 06 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி ஆண்டின் போது நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், நீர்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சிற்கு ஆண்டின் போது ரூபா 271 மில்லியன் தொகையான மேலதிக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின்

இறுதியின் போது மேலும் நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 1,726 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 38 | 28 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 75 | 60 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 38 | 35 | 03 |
| | மொத்தம் | 155 | 125 | 30 |